S.C.323/2017

**P.W.19 திரு.மணிகண்டன் 01.04.2022**

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசரில் வீட்டின் முன்புறம் காலியிடமாகவும் அதன் பின்னர் ஹால் இருந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஹால் பிரித்து காண்பிக்கப்பட்டுள்ளது. மாதிரி வரைபடத்தில் கோடு போட்டு பிரித்து காட்டப்பட்டதற்கு குறிப்பிடும்படியான காரணம் எதுவும் உண்டா என்றால் இல்லை. ஹாலுக்கு அடுத்து சின்ன ரூம் காட்டப்பட்டுள்ளது, அதில் 2 பீரோக்கள் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது. அதற்கு அடுத்து சமையலறை காட்டப்பட்டுள்ளது, அதன் பிறகு பாத்ரூம் காண்பிக்கப்பட்டுள்ளது. எனக்கு பாத்ரூமிற்கும் டாய்லட்டிற்கும் வித்தியாசம் தெரியும். பாத்ரூம் குளிப்பதற்காகவும் டாய்லட் கழிவறையாகவும் பயன்படுத்தப்படும் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் பாத்ரூம் மட்டுமே இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கழிப்பறை இருந்ததாக காட்டப்படவில்லை. பொதுவாக வீட்டில் இருந்து ரத்தம் கைப்பற்றினால் அது வீட்டின் எந்த பகுதியில் அதாவாது ஹாலா, ரூமா, அடுப்பறையா, பாத்ரூமா என்று குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்று சொன்னால் சொல்ல வேண்டியதில்லை. சம்பவம் நடந்த இடம் மிகவும் முக்கியமானது என்றால் சரிதான். சம்பவம் எங்கு தொடங்கியது என்பது புலன் விசாரணைக்கு முக்கியம் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் சம்பவ வீட்டின் ஹாலில் சம்பவம் முதன் முதலில் தொடங்கியுள்ளது என்றால் சரிதான். ஹாலில் இறந்து போன நபர் ரத்தக்காயங்களுடன் இழுத்து செல்லப்பட்டு பாத்ரூமிற்குள் கொண்டு செல்லப்பட்டார் என்றால் சரிதான். ஹாலில் இருந்து ரத்தக்கறை கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். ஹாலில் இருந்து பாத்ரூம் வரை செல்லும் பாதையில் ரத்தக்கறை எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அசாஆ 11 ல் இறந்து போனவரின் உடல் கிடந்த இடத்தில் இருந்து ரத்தம் எடுக்கப்பட்டதாகவோ பாத்ரூமில் இருந்து எடுக்கப்பட்டதாகவோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இறந்து போன நபரின் உடல் கிடந்த இடத்தில் ரத்தம் அதிகமாக இருந்ததால் மாதிரிக்காக ரத்தம் எடுக்கப்பட்டது. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் இறந்து போன நபருடன் ஹாலில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் ஹாலில் இருந்து இறந்து போன நபரை பாத்ரூமிற்கு இழுத்து செல்லவில்லை என்றும் அதனால் தான் ஹால்

மற்றும் இழுத்து சென்றதாக சொல்லப்படும் பகுதியில் ரத்தக்கறை இல்லாததால் தான் மேற்படி விவரங்களை என்னுடைய புலன் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. இவ்வழக்கில் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. மோப்ப நாய் மூலம் சோதனை செய்யப்பட்டால் மோப்ப நாயை அழைத்து வந்தவரை விசாரித்து அறிக்கை பெற வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் மோப்ப நாய் வீட்டிற்குள் சென்று பரிசோதித்தது என்றால் சரிதான். வீட்டின் ஹால், அடுப்பறை, ஆகிய இடங்களில் மோப்ப நாய் மோப்பம் செய்து காண்பித்தது என்றால் சரிதான். மோப்ப நாய் வீட்டில் மோப்பம் செய்த இடத்தில் இருந்து எந்த சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். மோப்ப நாய் வந்து சென்ற பின்னர் தான் 2ம் எதிரி சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டார் என்றால் சரிதான். மோப்ப நாய் வந்து சென்ற இடத்தில் தான் 2ம் எதிரியிடமிருந்து சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். சாபொ 20ல் சம்பவ இடத்தில் கிரைண்டர் இருந்ததாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். சாபொ 20ல் காட்டப்பட்டுள்ள தண்ணீர் டிரம், தண்ணீர் குடங்கள், சிறிய பாத்திரங்கள், ஸ்பீக்கர், ஆயில் பாட்டில், ஆகியவற்றை பார்வை மகசரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் 2 சேர் சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்டதாக கண்டுள்ளதா என்றால் இல்லை. 1 சேர் தான் பயன்படுத்தப்பட்டதாக கண்டுள்ளது. சாபொ 20 ஆன புகைப்படத்தின் ஹாலில் எடுக்கப்பட்ட போட்டோவில் ரத்தக்கறை இருந்ததாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். சாபொ20ல் கத்தி –1 காட்டப்பட்டுள்ளது. அது எங்கு வைத்து போட்டோ எடுக்கப்பட்டது என்று குறிப்பாக என்னால் சொல்ல முடியாது. சாபொ20ல் இறந்து போன நபரின் உடல் கழிப்பறைக்கு முன்பாக கிடந்ததாக தான் காட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நீதித்துறை நடுவரிடம் 164 வாக்குமூலம் வாங்குவதற்கு யாராவது மனு கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் 164 வாக்குமூலம் கொடுக்க விருப்பம் உள்ளதா என்று சாட்சிகளிடம் கடிதம் கொடுத்தேனா என்றால் இல்லை. 164 வாக்குமூலம் பெற்ற பிறகு மீண்டும் சாட்சிகளை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. வழக்கின் குற்ற பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முன்பாக 164 வாக்குமூலத்தை நீதித்துறை நடுவரிடமிருந்து பெற்று குற்ற அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 164 வாக்குமூலமானது இவ்வழக்கிற்கு முக்கியமானது

என்ற விவரம் எனக்கு தெரியும். 164 வாக்குமூலம் கொடுத்துள்ள சதீஷ்கண்ணன் என்பவர் 2ம் எதிரியின் சகோதரர் ஆவார். மேற்படி சதீஷ்கண்ணன் கொடுத்த 164 வாக்குமூலத்தில் மாலை 06.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றதாகவும் அப்போது அவர் தாயார் இருந்ததாகவும் வீட்டு வாசலில் கூட்டமாக இருந்ததாகவும் சாவி குறித்து கேட்டதாகவும் அவசர ஊர்திக்கு தகவல் அளித்ததாகவும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி தகவல் குறித்து சதீஷ்கண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மாலை 06.00 மணிக்கு சம்பவ இடத்தில் நின்றிருந்த நபர்களை யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக அவசர காவல் எண்.100க்கு விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சம்பவ வீட்டில் சதீஷ்கண்ணனி' தாயார் மாலை 06.00 மணியளவில் இருந்ததற்கான காரணத்தை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் 2ம் எதிரி அசா1னிடம் எந்த விதமான வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் அதனடிப்படையில் அசா1 புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் இவ்வழக்கிற்காக பின்னிட்டு ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சி விக்டோரியா எதிரிகளை நேரில் பார்த்த கண்ணுற்ற சாட்சி என்றால் சரிதான். சாட்சி விக்டோரியா மூலமாக எதிரிகளை அடையாளம் காண அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடு செய்யவில்லை என்றால் சரிதான். 1, 3, 4 எதிரிகளை சாட்சி விக்டோரியாவிற்கு சம்பவத்திற்கு முன்பாக தெரியாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கிற்கு பின்னர் தான் மேற்படி விவரம் தெரியும். எனது புலன் விசாரணையின் படி சம்பவ இடத்திற்கு 1ம் எதிரி குழந்தையுடன் வரவில்லை என்றால் சரிதான். சாட்சி விக்டோரியாவின் 164 வாக்மூலத்தில் பின்பு ஒரு பெண் 3 வயது பெண் குழந்தையுடன் எனது கடைக்கு வந்து பிஸ்கட் பாக்கெட் வாங்கிச் சென்றார் என்று சொல்லியுள்ள விவரம் குறித்து சாட்சி விக்டோரியாவை விசாரித்து அந்த பெண் குறித்து விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். சாட்சி விக்டோரியாவின் 164 வாக்மூலத்தில் தான் வீட்டிற்கு சென்றுவிட்டு 06.00 மணிக்கு கடையை திறக்க வந்த போது அந்த ராஜேஷ் பையன் வீட்டின் முன்பு நின்றார்கள் நிறைய பொதுமக்கள் நின்றார்கள் என்ற விவரம் குறித்து சாட்சி விக்டோரியாவிடம்

நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சம்பவம் குறித்து ஏற்கனவே தகவல் தெரிந்து காவல் துறையினரும் பொதுமக்களும் 6 மணிக்கே கூடிவிட்டார்கள் என்றும் மேற்படி சங்கதிகள் வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் அதை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. CCTV Footage எடுத்தது குறித்து வீட்டின் உரிமையாளர், வீட்டின் பணிபுரியும் நபர்கள் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. 2ம் எதிரி ராஜேஷ் என்பவரின் கைது மற்றும் arrest card ல் அவர் எங்கு வைத்து கைது செய்யப்பட்டார், எப்போது காவல் நிலையம் கொண்டு வரப்பட்டார் என்ற விவரம் உள்ளது என்றால் சரிதான். 2ம் எதிரியின் arrest card ல் 28.02.2017ம் தேதி 23.30 மணிக்கு கூடல் புதூரில் வைத்து கைது செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் arrest card ல் 28.02.2017ம் தேதி 23.30 மணிக்கு தான் காவல் நிலையத்திற்கு 2ம் எதிரி கொண்டு வரப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் எதிரி ராஜேஷ் என்பவரின் கைது மற்றும் arrest card எசாஆ1 ஆகும். 1ம் எதிரியின் கைது குறிப்பாணையில் ராமதாஸ் என்பவரிடம் கையெழுத்து பெறப்பட்டது. 1ம் எதிரி லாவண்யாவின் கைது செய்யும் போது உடன் இருந்த சாட்சியான ராமதாஸின் உறவினர் தான் கோவிந்தன். அவர் உத்தமபாளையத்தை சேர்ந்தவர் ஆவார்.

(சாபொ 4 குறுந்தகடானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி குறுந்தகட்டினை திறந்த நீதிமன்றத்தில் பார்வையிடுவதற்காக குறுக்கு விசாரணை நிறுத்தம் செய்யப்பட்டது )